தேதி.17.09.2025

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No. 46/2014 திரு.ஹரிஹரன், த/பெ.பழனிச்சாமி வா.சா.2

<u>வா.சா.2 : சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

க.ச.எண்.56/1ன் பட்டா எண்.338 என்றால் சரிதான். மேற்படி பட்டா தா.ராமசாமி என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அதன் பின்னிட்டு க.ச.எண்.56/1 ஆனது 56/1ஏ, 56/1பி, 56/1சி என்று பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.56/1ஏ–ன் விஸ்தீர்ணம் 1.33.45 என்றால் சரிதான். அதன் பின்னிட்டு க.ச.எண்.56/1ஏ–ஆனது 56/1ஏ1, 56/1ஏ2 என்று மேலும் பிரிக்கப்பட்டுள்ளது என்று நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் அதற்குண்டான ஆவணம் உள்ளதா என்றால் பார்த்தால் தான் சொல்ல முடியும். பட்டா எண்.338 மொத்தம் 22 பேர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்களின் பெயர்கள் எந்த தேதியில் சேர்க்கப்பட்டுள்ளது என்று நீ.ம.சா.ஆ.2ஆன சிட்டா பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நீ.ம.சா.ஆ.2ல் ஆறாவது நபரின் பெயரான காளிமுத்து மகன் சுப்பையன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.2ஆன மொத்தமாகத்தான் உள்ளது என்றும் தனிப்பட்ட பெயரில் இல்லை என்றால் சரிதான். காளிமுத்து கவுண்டர் பெயரில் 1.96 ஏக்கருக்கு தனித்து பட்டா இல்லை என்றால் சரிதான். பொதுவாக ஒருவரின் பெயரை பட்டாவில் சேர்க்கவேண்டும் என்றால் ஆவணங்களை சரிபார்த்து பின்னர்தான் சேர்ப்பது வழக்கம் என்றால்சரிதான். பட்டா எண்.338ல் உள்ள பெயர்களை நீக்கம் வேண்டும் என்று

யாரும் எங்களிடம் மனு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பட்டா எண்.338ல் உள்ள சொத்துக்களை யார் யாருக்கு விற்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

<u>வாதி தரப்பில் மறு விசாரணை</u>

நான் ஏற்கனவே 04.03.2025ம் தேதியில் கொடுத்த முதல் விசாரணையில் புதிய க.ச.எண்.56/1ஏ1 1.96 ஏக்கர் விவசாய பூமி உள்ளது சரிதான் என்றும், இன்று வரை காளிமுத்து கவுண்டர் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான் என்றும், சிட்டா, அடங்கல், ஆர்.எஸ்.ஆர் ஆகியவை காளிமுத்து கவுண்டர் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான் என்றும் சொல்லிவிட்டு தற்போது மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.